1981 மார்ச் 3]

குளித்தலை-முசிறியினை இணைக்கும் பெரியார் பாலத்தில் மின் விளக்குகள் பொருத்துதல்.

*வினா எண் 346—திரு. இரா. கருப்பையா, திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை முசிறி இணைப்பு பெரியார் பாலத்தில் இதுவரை மின் விளக்குகள் பொருத்தவில்லை என்பது உண்மையா?

(ஆ) எப்போது மின் விளக்குகள் பொருத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மின் விளக்குகள் பொருத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அவை தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதியாக்கப்பட்டபின் வேலை துவங்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : 1980 ஆம் ஆண்டே இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு இன்னும் இந்த வேலை பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை துறையூர், சாலையில் முசிறியையும் குளித்தலையையும் இணைக்க காவேரி ஆற்றின் குறுக்கே ரூ. 1,39,00,000 செலவில் ஒரு பாலம் அமைக்கப்பட்டது. அந்தப் பாலத்தில் மின் விளக்குகள் பொருத்த நான்கு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. கிடைக்கப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும் அவர்கள் அதிகத் தொகை கேட்கிற காரணத்தாலும் மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முன்னால் இருக்கிறது. கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : மறுபடியும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவும், அதிகமான தொகை இருக்கிறது என்ற காரணத்தால் மீண்டும் மறு ஒப்புந்தப்புள்ளி கோரப்படுமா என்பதோடு இதைத் தவிர்க்கக்கூடிய முறையில் அரசாங்கமே நேரடியாக அந்தப் பாலத்திற்கு மின் விளக்குகள் அமைக்கும் வேலையை எடுத்துச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதைப் பார்த்துவிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[1981 மார்ச் 3

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : இந்தப் பாலமானது ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய நீளமானதொரு பாலமாக இருக்கிறது. அங்கே மின் விளக்குகள் இல்லாத காரணத்தால் காவல் துறையினர் கூட அந்தப் பாலத்தை கண்காணிக்க முடியாமல் அங்குள்ள இரும்பு போன்ற மற்ற சாமான்கள் திருடு போய்க்கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இதுபோன்ற திருட்டுக்களைத் தடுக்கவும் அரசு நேரடியாகத் தலையிட்டு அங்கே உடனடியாக மின் விளக்குகள் பொருத்த ஆவனச் செய்யுமா? இந்த நீண்ட பாலமானது இருள் அடைந்து இருப்பதன் காரணமாக சில சமூக விரோதிகள் அங்கே பலவிதக் குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து காவல் துறையினரும் சரியான நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பாலத்தில் உடனடியாக மின்விளக்குகள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சமூக விரோதச் செயல்கள் தடுக்கப்படுவதோடு மக்கள் போக்குவரத்திற்கு ஏற்றதாக இருப்பதற்காகத்தான் இந்த மின் விளக்குகள் பொருத்துவதற்குண்டான திட்டங்கள் தீட்டி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமூக விரோதச் செயல்கள் நடை பெறாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு எவ்வளவு சீக்கிரம் அந்த மின் விளக்குகளைப் பொருத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அரசுக்கு தகவல் அனுப்பியிருக்கிறார் கள். அதுவும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைமுறை படுத்தப்படும்.

கோபி நகரத்திலுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டி.

* வினா எண் 347 : திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகரத்திலுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட் டிக்கு நீர் உந்து நிலையத்தில் 'ஜெனரேட்டர்' வைப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : கோபி செட்டிபாளையம் நகராட்சி பொதுமக்களுக்கு, மின் வினியோகம் தடைப்பட்ட நேரங்களிலும் தொடர்ந்து குடிநீர் வினியோகம்